29.03.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## நெல்லை, குமரி, தூத்துக்குடியில் திடீர் மழை: வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது



திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் திங்கள்கிழமை பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்தது. இதனால், வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் நிம்மதியடைந்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக 103 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமான வெப்பம் நிலவுகிறது. அக்னி நட்சத்திரத்தையும் விஞ்சும் வகையில் இப்போதே வெப்பம் காணப்படுகிறது. இதனால், பகலில் வீட்டைவிட்டு வெளியே வர முடியாமலும், இரவில் வெப்பத்தின் தாக்கம் காரணமாக தூங்க முடியாமலும் மக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திங்கள்கிழமை மாலை அம்பாசமுத்திரம்,

கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், முக்கூடல், வடக்குஅரியநாயகிபுரம், சுத்தமல்லி, பேட்டை, களக்காடு தெற்கு வள்ளியூர் பகுதியில் மிதமான மழை பெய்தது. குளிர்ந்த காற்றும் வீசியதால் வெப்பம் சற்று தணிந்தது.

புறநகர் பகுதியில் பெய்த இந்தத் திடீர் மழையால் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் உள்ளிட்ட மாநகரிலும் குளிர்ந்த காற்று வீசியது.

குமரியில்... கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்ச் மாத மத்தியில் கோடை மழை பெய்யும். ஆனால், நிகழாண்டு கோடை மழையை எதிர்பார்த்து மக்கள் ஏமாற்றமடைந்தனர். இந்நிலையில், திங்கள்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வானம் கருக்கத் தொடங்கியது. தொடர்ந்து குளிர்ந்த காற்றுடன் மழை பெய்தது. இந்த மழை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மாலையில் பள்ளி, கல்லூரி நிறைவடையும் நேரம் என்பதால் மாணவ, மாணவிகள் நனைந்துகொண்டே வீடு திரும்பினர்.

மாவட்டத்தில் உள்ள மலையோரப் பகுதிகளான பேச்சிப்பாறை, மோதிரமலை, சீரோ பாயிண்ட், குலசேகரம், அருமனை, திருவட்டார், சுருளகோடு உள்ளிட்ட பகுதிகளிலும் மிதமான மழை பெய்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில்... ஆறுமுகனேரி, ஆத்தூர், காயல்பட்டினம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகாலை முதல் காலை 8 மணி வரை சாரல் மழை பெய்தது. இதனால் இப்பகுதியில் கடந்த ஒரு மாத்திற்கும் மேலாக நிலவிய வெம்மை தணிந்தது.

இருப்பினும், ஆறுமுகனேரி மற்றும் சுற்றுப் பகுதிகளில் உப்பளப் பணிக்குச் சென்ற பணியாளர்கள் வேலையின்றி திரும்பின்ர். மேலும், இப்பகுதியில் நடைபெறும் பிசான அறுவடையும் பாதிப்படைந்தது.

வறண்டு வரும் அணைகள் திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து நிலவி வரும் கடும் வெப்பக்காலும், மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் வறட்சி நிலவுவதாலும் அணைகளுக்கு நீர்வரத்து வெகுவாகக் குறைந்துள்ளது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 25 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 9 கனஅடி, கடனாநதி அணைக்கு 11.48 கனஅடி, ராமநதி அணைக்கு 5

கனஅடி, கருப்பாநதி அணைக்கு 2 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 3 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக 300 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணையில் பிரதான கால்வாய் பாசனத்துக்கு 445 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

நீர்மட்டம்: பாபநாசம் அணை நீர்மட்டம் 86.60 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 99.24 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 88.93 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 38.70 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 25 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 24.94 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 11.80 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 65.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 27.50 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 15.88 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 2.50 அடியாக இருந்தது.

## நிலக்கடலையில் நோய் மேலாண்மை குறித்து இலவச பயிற்சி



நாமக்கல்: நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த இலவச பயிற்சி முகாம் வரும் 31 ஆம் தேதி நாமக்கல்லில் நடைபெறுகிறது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் என்.அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 31 ஆம் தேதி காலை 9 மணிக்கு நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப்பயிற்சி முகாமில் விதைகள் மூலம் பரவக்கூடிய நோய்கள், எதிர் உயிர் பூச்சி மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி செய்தல், மருந்து தெளிப்பு முறைகள், பூச்சி மற்றும் நோய்களை கண்டறியும் முறைகள், உயிரியல் முறைகளைப் பயன்படுத்தி பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்துதல், தாவர நூற் புழுக்களை கண்டறிந்து கட்டுப்படுத்துதல் மற்றும் விதைகளை சேமித்து வைத்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286 266345, 266650 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 30ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் முன்பதிவு செய்யும் 30 நபர்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படும் என்றார்.

## ரூ. 9 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ. 9 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், வரத்து குறைந்து மொத்தம் 584 நிலக்கடலை மூட்டைகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

ஏலத்தில், முதல் ரக நிலக்கடலை குவிண்டால் ரூ. 5,200 முதல் ரூ.5,480 வரை, இரண்டாவது ரகம் ரூ. 4,800 முதல் ரூ. 5,100 வரை, மூன்றாவது ரகம் ரூ. 3,900 முதல் ரூ.4,600 வரை என ஏலம்போனது.

மொத்தம் ரூ. 9 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 85 விவசாயிகளும், 5 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## தேயிலைச் செடிகளில் கொப்பள நோய்

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள தேயிலைச் செடிகளில் கொப்புள நோய் தாக்கும் அறிகுறிகள் தென்படுவதால் தேயிலை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் பகலில் நல்ல வெப்பமும், அதிகாலையில் குளிரும் மாறி மாறி காணப்படுவதால் மாவட்டத்தில் தேயிலைச் செடிகளில் கொப்பள நோய் தாக்கும் சூழல் காணப்படுகிறது. மேலும் உருளைக் கிழங்கு செடிகளில் கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதனால், சிறு, குறு விவசாயிகள் அதிக விலைக்கு பூச்சிச் கொல்லி மருந்து தெளிக்க முடியாமல் உள்ளனர். இந்த நோய்களில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க அரசு மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்து வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குன்னூரில் ஜெகரண்டா மலர் சீசன் துவக்கம்

குன்னூரில் ஜெகரண்டா மலர் சீசன் துவங்கி சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின்போது பிரேசில் நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட ஜெகரண்டா மலர்ச் செடிகள் மலைப் பாதைகள், தேயிலைத் தோட்டப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டது. இவை அனைத்தும் தற்போது நன்கு வளர்ந்து மரமாகியுள்ளன. கூட்டு இலைகளை கொண்டு விரிந்து பரந்து வளரும் தன்மை கொண்ட இந்த வகை மரங்களில் கோடைக் காலம் துவங்கும்போது இலைகள் முழுமையாக கீழே விழுந்து மலர்கள் மட்டுமே பூத்துக் குலுங்கும்.

கத்தரிப்பூ வண்ணம் கொண்ட இம்மலர்களில் தேன் அதிக அளவில் உள்ளதால் பூச்சிகள் இம்மரத்தில் வசித்து வருகின்றன.

தற்போது குன்னூர், மேட்டுப்பாளையம் மலைப் பாதையில் பச்சை பசேல் என இருக்கும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வனப் பகுதிகளுக்கு இடையே சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வகையில் ஜெகரண்டா மலர்கள் பூத்து குலுங்குகின்றன. இதை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வதோடு, மலர்களை பறித்தும் சென்று வருகின்றனர். மலர்களை எடுத்து நெற்றியில் வேகமாக அடிக்கும்போது பட்டாசு வெடித்த சத்தம்போல் கேட்பதால் இப்பகுதி மக்கள் இதற்கு பட்டாசுப் பூ என்றும் பெயர் வைத்துள்ளனர்.

## கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்துக்கு 2 என்ற வீதத்தில் கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்குழு செயலாளர்கள் கூட்டம் திருவண்ணாமலையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, கே.குமரேசன் தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் எம்.வீரபத்திரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில், மாவட்டத்தின் சில பகுதிகளில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. வந்தவாசி, வெம்பாக்கம், செய்யாறு பகுதிகளில் நெற்பயிரில் புகையான் மற்றும் நெல்பழ நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

இதனால், நெல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

செங்கம், போளூர், சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகள் கூட்டணி அமைத்து, குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்கின்றனர்.

எனவே, நெல் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு ஒன்றியத்துக்கு 2 வீதம் கூடுதலாக அரசு நேரடி கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும்.

கலசப்பாக்கம் அடுத்த ஆதமங்கலம் புதூர், போளூர், வந்தவாசி ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க மேற்கூரைகளுடன் கூடிய கிட்டங்கிகள் அமைக்க வேண்டும். தாற்காலிகமாக நெல் மூட்டைகளை மூட, போதுமாக தார்பாய்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலிறுத்தி மார்ச் 30-ம் தேதி கலசபாக்கத்திலும், 31-ம் தேதி ஆதமங்கலம் புதூரிலும், ஏப்ரல் 1-ம் தேதி திருவண்ணாமலையிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த இலவச பயிற்சி

நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை குறித்த இலவச பயிற்சி முகாம் வரும் 31-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் வியாழக்கிழமை (மார்ச் 31) காலை 9 மணிக்கு நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை என்ற தலைப்பில் ஒருநாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இம் முகாமில் விதைகள் மூலம் பரவக்கூடிய நோய்கள், எதிர் உயிர் பூச்சி, பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி செய்தல், மருந்து தெளிப்பு முறைகள், பூச்சி, நோய்களைக் கண்டறியும் முறைகள், உயிரியல் முறைகளைப் பயன்படுத்தி பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்துதல், தாவர நூல் புழுக்களை கண்டறிந்து கட்டுப்படுத்துதல், விதைகளைச் சேமித்து வைத்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286 - 266345, 266650 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 30-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் முன்பதிவு செய்யும் 30 பேருக்கு மட்டும் பயிற்சியளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முருங்கைக்காய்களை பாதுகாக்க குளிர் பதனக் கிடங்கு அமைக்க வலியுறுத்தல்**

முருங்கைக்காய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் கரூரில் குளிர் பதனக் கிடங்கு அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, க.பரமத்தி, தாந்தோணி வட்டாரப் பகுதிகளில் அதிகளவு முருங்கை சாகுபடி நடைபெற்று வருகிறது.

சுமார் 5,000 ஏக்கரில் நடைபெற்று வரும் இந்த சாகுபடியில் 70 சதவீதம் அரவக்குறிச்சி பகுதியில்தான் நடந்து வருகிறது. வெப்ப மண்டலப் பயிரான முருங்கைக்காய்களில் செடி முருங்கை, கொடி முருங்கை, நாட்டு முருங்கை போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகிறது.

இவை அறுவடை செய்யப்பட்டு மாவட்டத்தில் பள்ளபட்டியில் உள்ள இந்திராநகர், அரவக்குறிச்சி அருகே உள்ள ஆத்துமேடு, ஈசநத்தம், கும்பூர், அழகாபுரி ஆகிய பகுதிகளில் நடைபெறும் வாரச் சந்தைகளுக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த சந்தைகளுக்கு வரும் காய்களை கேரளா, ஆந்திரா போன்ற மாநில வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கிறார்கள். இந்நிலையில் தற்போது அதிக விளைச்சல் இருந்தும் விலை கிடைக்காமல் தவித்து வருகிறோம்.

இதுதொடர்பாக தேசிய விவசாய விழிப்புணர்வு இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் கூறுகையில், தமிழகத்தில் முருங்கை சாகுபடி அதிகளவு நடைபெறும் மாவட்டங்களில் கரூரும் ஒன்று. இங்கு நல்ல விளைச்சல் காலங்களில் காய்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

விளைச்சல் குறைவான காலங்களில் மட்டும் விலை கிடைக்கிறது. தற்போது நன்றாக விளைச்சல் உள்ள நிலையில் 2.5 கிலோ எடைகொண்ட கட்டின் விலை ரூ.5-க்கு மட்டுமே விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பயிர்களுக்கு செலவிடப்பட்ட உரச் செலவு

கூட கிடைப்பதில்லை. ஆனால் விளைச்சல் இல்லாத நேரங்களில் ரூ.40-க்கும் மேல் விற்பனையாகும்.

எனவே விளைச்சல் அதிகம் உள்ள காலங்களில் காய்களை தமிழகத்தில் மட்டும் விற்பனை செய்வதற்கு பதில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் வகையில் அரவக்குறிச்சியிலோ அல்லது கரூரில் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர வேண்டும் என்றார்.

## விவசாயத்துக்கு எதிரான திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தாது: பொன்.ராதாகிருஷ்ணன்

விவசாயத்துக்கு எதிரான திட்டத்தை மத்திய அரசு ஒருபோதும் அமல்படுத்தாது என மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார்.

விவசாய சங்கத் தலைவர் கே.வி.கண்ணன் பிள்ளை எழுதிய, ஏர், நீர், பார் காக்க என்ற வேளாண் நூல் வெளியீட்டு விழா சிதம்பரத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

காவிரி டெல்டா பாசன விவசாய விளைபொருள்கள் உற்பத்தியாளர் பாதுகாப்பு மைய பொதுச் செயலர் எஸ்.ரங்கநாதன் தலைமை வகித்தார்.

அகில இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.வி.கிரி, விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் மு.சேரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மூத்த வழக்குரைஞர் ஏ.சம்பந்தம் நூல் அறிமுகவுரையாற்றினார். மத்திய நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் நூலை வெளியிட்டு பேசியது:

தமிழக விவசாயிகளின் பிரச்னைகளை பிரதமர் நரேந்திர மோடி முழுமையாக தெரிந்து வைத்துள்ளார். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தி அதன் பலத்தை நிரூபித்துள்ளார்.

காவிரி நீர்ப் பிரச்னைக்கு தீர்வு காண முயன்று வருகிறார். மத்திய நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் வருமானம் இருமடங்காக உயர்த்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு திட்டத்தை விரிவுபடுத்தி, புதிய பயிர்ப் பாதுகாப்பு திட்டத்தை மோடி அறிவித்துள்ளார்.

141 மில்லியன் ஹெக்டேர் விவசாய நிலங்களில் பாசன வசதி 46 சதவீதம் மட்டுமே என்பதால், மேலும் 28.5 லட்சம் ஹெக்டேர் நிலங்களில் நீர்ப்பாசன வசதி கொண்டு வரப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார். விவசாயிகள் கடன் பெற ரூ.9 லட்சம் கோடி நிதி ஒதுக்கியுள்ளார்.

தமிழகத்தில் மீத்தேன், கெயில் குழாய் பதிப்பு போன்ற பிரச்னைகள் உள்ளன. விவசாயத்தை அழிக்கும் திட்டத்தை எந்தக் காரணம் கொண்டும் மத்திய அரசு கொண்டுவராது. மீத்தேன் திட்டத்துக்கு நிச்சயமாக ஆதரவு கிடையாது. மற்ற திட்டங்களுக்கு மாநில அரசு மற்றும் மக்களின் ஆதரவு தேவை. நான்குவழிச் சாலை அமைக்க வேண்டும் என்றால் நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். அதிக பாதிப்பில்லாத புதிய நில ஆர்ஜித திட்டத்துக்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அத்திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்த முடியவில்லை. முன்னேற்றத்துக்காக சில இழப்புகளை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்கான அரசு மாநிலத்தில் அமைய வேண்டும் என்றார்.

பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன் பேசுகையில், காவிரி நீரை நம்மால் சேமித்து வைக்க முடியவில்லை. 250 டிஎம்சிக்கு கையேந்தி வருகிறோம். ஆனால், ஆயிரம் டிஎம்சிக்கு மேலான நீர் வங்கக்கடலில் கலக்கிறது என்றார்.

பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் பேசுகையில், அதிமுக அரசு செயல்படுகிறதா எனத் தெரியவில்லை. தமிழகத்தில் மத்திய அரசின்

எல்இடி திட்டத்தை செயல்படுத்தவில்லை.

எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தாத தமிழகம், எப்படி மின்மிகை மாநிலமாக மாற முடியும் என கேள்வி எழுப்பினார்.

நிகழ்ச்சியில், விவசாய சங்கங்களின் கூட்டமைப்புச் செயலர் செ.நல்லசாமி, பி.கே.தெய்வசிகாமணி, வி.வேங்கடபதி ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். நூலாசிரியர் கே.வி.கண்ணன் பிள்ளை ஏற்புரையாற்றினார்.

சென்னை பத்மா பதிப்பகம் யு.எஸ்.எஸ்.ஆர்.நடராஜன் வரவேற்றார். மிட்டவுன் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் ச.மணிவண்ணன் நன்றி கூறினார்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நெல் வரத்து அதிகரிப்பு

திருக்கோவிலூரை அடுத்த அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு திங்கள்கிழமை நெல்வரத்து அதிகரித்து காணப்பட்டது.

இங்கு, கடந்த சில மாதங்களாக நெல் வரத்து அதிகரித்து காணப்பட்ட நிலையில், கடந்த 15 நாள்களாக வரத்து மிகவும் சரிந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை நெல்வரத்து மீண்டும் அதிகரித்தது.

12 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. அவற்றில் 8 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டன. மீதமுள்ள 4 ஆயிரம் மூட்டைகள் செவ்வாய்க்கிழமை கொள்முதல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

திங்கள்கிழமை நெல் ஏ.டி.டி-37 அதிகபட்சம் ரூ.809-க்கும், குறைந்தபட்சம் ரூ.739-க்கும், ஏடிடி-39 அதிகபட்சம் ரூ.940-க்கும், குறைந்தபட்சம் ரூ.880-க்கும், ஏடிடி-45 அதிகபட்சம் ரூ.840-க்கும், குறைந்தபட்சம் ரூ.790-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. சென்ற மாதத்தைக் காட்டிலும் திங்கள்கிழமை குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அதேபோல் உளுந்து ஒரு மூட்டை (100 கிலோ) அதிகபட்சம் ரூ.9,800-க்கும், குறைந்தபட்சம் ரூ.9,500-க்கும், மணிலா (80 கிலோ) அதிகபட்சம் ரூ.6,050-க்கும், குறைந்தபட்சம் ரூ.5,780-க்கும், எள் (80 கிலோ)

அதிகபட்சம் ரூ.5,900-க்கும், குறைந்தபட்சம் ரூ.4,900-க்கும், மக்காச்சோளம் (100 கிலோ) அதிகபட்சம் ரூ.1,503-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,410-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

## வேளாண்மையும் பாசன ஆதாரங்களும்



தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற மகாகவியின் சிந்தனை, உணவை உற்பத்தி செய்ய உதவும் நீருக்கும் பொருந்தும். இந்தியா போன்ற வெப்ப மண்டல நாடுகளுக்கு போதிய நீர்ப்பாசன வசதி இருந்தால் மட்டுமே தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியும். இதை கருத்தில் கொண்டே "வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்' என பாரதி கண்ட கனவு, முயற்சியின்மையால் இன்னும் கனவாகவே உள்ளது.

பருவமழை பொய்ப்பதும், குறைவதும் புதிதல்ல. ஐந்து ஆண்டுகள் கொண்ட பருவகால சுழற்சியில் ஓர் ஆண்டில் நல்ல மழையும், மற்றோர் ஆண்டில் மிகக் குறைவான மழையும் மீதமுள்ள 3 ஆண்டுகளில் இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையும் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற முதுமொழிக்கேற்ப எக்காரியத்தையும் சரியான தருணத்தே செய்து முடிக்க வேண்டும். தவறினால் பலன் கிடைக்காமல் போகும். அத்துடன் பல விபரீதங்களும் ஏற்பட்டு விடலாம். இது நீர்நிலை ஆதாரங்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு மிகவும் பொருந்தும்.

ஏனெனில், பருவமழை அதிகம் கிடைக்கும் ஒரு சில மாதங்களில், நாள்களில் மழை வெள்ளமும் திடீர் என்று பெருகும்பொழுது அதைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில், சென்ற டிசம்பரில் நாம் பார்த்ததுபோல் உயிர்ச்சேதம், பொருள்சேதம், பயிர் நிலம் பாதிப்பு போன்றவை ஏற்படும். இதன் தொடர் விளைவுகளாகிய மின் விநியோகம் பாதிப்பு, சாலைச் சீர்கேடுகள், பொருள்களின் விலையேற்றம், வீடுகள் இடிதல், தொற்றுநோய் பரவல் போன்ற பல்வேறு பிரச்னைகளும் ஏற்படும்.

அண்மைக் காலத்தில் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் மனித சமுதாயத்தின் நீர்த் தேவை ஆண்டிற்கு 4 சதவீதம் அதிகரித்து வருகின்றது. ஆனால், அதைச் சரிகட்டும் அளவுக்கு நீரின் அளிப்பு அதிகரிப்பதாக இல்லை. அதிக அளவு மழை பெறும் உலக நாடுகளின் வரிசையில் இந்தியா 2-ஆம் இடம் வகித்தபோதும் தொடர்ந்து வறட்சியான நிலையே பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகிறது.

இதற்கான முக்கியக் காரணம் நம் நாட்டில் தேவையான அளவு மழை பெய்த போதிலும், அதனைச் சேமித்து வைப்பதற்கான அடிப்படையை இன்றளவும் அரசோ அல்லது மக்களோ சிறப்பாக மேற்கொள்ளவில்லை. உதாரணமாக, இந்தியாவில் தற்போது மழை மற்றும் ஆறுகள் மூலம் கிடைக்கும் நீரை சேமிக்கும் அளவு ஆண்டிற்கு 30 நாள்களுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. மீதமுள்ள நீர், சேமிப்புத் திறன் இன்மையால் ஆண்டுதோறும் கடலில் சென்று கலந்து விடுகிறது. ஆனால், வளர்ந்த நாடுகள் ஏறத்தாழ 900 நாள்களுக்குத் தேவையான மழை, ஆற்று நீரை உரிய முறையில் சேமித்து பயன்படுத்தும் அளவு திறன் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறினால், தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவு 921 மி.மீ. இந்தியாவின் சராசரி மழையளவு 1,580 மி.மீ.க்கும் அதிகமாகும். 1 மி.மீ. மழை மூலம் 1 கிரவுன்ட் (2400 சதுர அடி) நிலத்தில் 223 லிட்டர் நீர் பெறலாம். ஆக, தமிழக (1.303 லட்சம் சதுர கி.மீ.) மற்றும் இந்திய (32.873 லட்சம் சதுர கி.மீ.) நிலப்பரப்பில் பெய்யும் மழையளவை இந்தியா முழுவதிலும் 3,000 இடங்களில் பதிவு செய்யப்பட்டு ஏறத்தாழ 40 வானிலை ஆய்வு மையங்களால் வாரந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் வெளியாகி வருகின்றன. இருப்பினும் நமது நீர் சேமிப்புத் திறன் இன்னும் மேம்படவில்லை.

மேலும், இந்தியாவில் அதிகளவு மழை இருந்தும், சராசரியாக நபர் வாரி நீர் சேமிப்புத் திறனை ஆராய்ந்தால் இது அமெரிக்காவில் தனிநபருக்கு ஆண்டுக்கு 6,150 கியூபிக் மீட்டராகவும், ரஷியாவில் 6,013 கியூபிக் மீட்டராகவும், ஆஸ்திரேலியாவில் 4,729 கியூபிக் மீட்டராகவும், சீனாவில் 2,486 கியூபிக் மீட்டராகவும் உள்ளது. ஆனால், இந்தியாவில் இது சொற்ப அளவாக 262 கியூபிக் மீட்டராகவே உள்ளது. இந்நிலையே நாம் எந்த அளவு அதளபாதாளத்தில் நீர் சேமிப்பில் திறன் அற்று உள்ளோம் என்பதற்கு உதாரணமாகும்.

தமிழகம் மற்றும் இந்தியாவின் வேளாண் சாகுபடி நிலப்பரப்பு, நீர்ப்பாசனப் பரப்பு, சாகுபடி பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் பயிர் அடர்த்தி இவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்திய அளவில் இவை அனைத்திலும் 1950 முதல் 2015-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அதிகரித்த நிலையில் இருப்பதையும், தமிழகத்தில் பயிர்களின் உற்பத்தித் திறன் தவிர மற்ற அனைத்தும் இதே காலகட்டத்தில் தொடர்ந்து குறைந்து வருவதையும் புள்ளி விவரங்களின் மூலம் தெளிவாக காணமுடிகிறது. இந்நிலைக்கான காரணங்களைக் காண்போம்.

வேளாண்மையில் மானாவாரி சாகுபடியில் கிடைக்கும் உற்பத்தித் திறனை விட நீர்ப்பாசன நிலத்தில் கிடைக்கும் உற்பத்தி 3 முதல் 5 மடங்கு வரை அதிகம் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தின் மூன்று முக்கிய நீராதாரங்கள் ஏரிப் பாசனம், கால்வாய்ப் பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம். இவைகளுள் 2012-13ஆம் ஆண்டின்

புள்ளி விவரங்களின்படி தமிழகத்தில் மொத்தம் 41,127 ஏரிகள் உள்ளன. இவற்றின் மொத்த பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு 10 லட்சத்து 11 ஆயிரத்து 860 ஹெக்டேர்.

தமிழக ஏரிகள் இரு வகையாக பகுக்கப்பட்டுள்ளன. ஒன்று, 40 ஹெக்டேருக்கும் குறைவாக உள்ள பஞ்சாயத்து அமைப்புகளின் மேற்பார்வையில் உள்ள சிறிய ஏரிகள். இவைகளின் எண்ணிக்கை 33,142. இரண்டு, 40 ஹெக்டேருக்கும் அதிகமாக உள்ள பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படும் பெரிய ஏரிகள்; இவைகளின் எண்ணிக்கை 7,985 ஹெக்டேர்.

இப்புள்ளி விவரங்கள் தமிழக அரசால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் "தமிழகம் - ஓர் பொருளாதார மதிப்பீடு' என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழகத்தில் 1950 முதல் 2015 வரையிலான மேற்கூறப்பட்ட மூன்று நீர்ப்பாசன சாகுபடி நிலப்பரப்பை ஆராய்ந்தால் 1950-களில் ஏறத்தாழ 8 லட்சம் ஹெக்டேராக இருந்த கால்வாய் ஆற்று பாசனம், 2010-களில் ஏறத்தாழ 7 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.

இதே காலகட்டத்தில், ஏரிப் பாசனம் 10 லட்சம் ஹெக்டேரிலிருந்து தற்போது 5.1 லட்சமாக பாதியாகக் குறைந்துள்ளது. 1960-களில் ஏரிப்பாசன சாகுபடிப் பரப்பு 9.1 லட்சம் ஹெக்டேராகும்.

ஆனால், ஏரிப்பாசனம் மற்றும் கால்வாய்ப் பாசனப் பரப்பு தொடர்ந்து குறைந்து கொண்டே சென்றாலும், அனைவருக்கும் புரியாத புதிராக உள்ள கிணற்றுப் பாசன பரப்பு 1950-களில் தமிழகத்தில் 5 லட்சம் ஹெக்டேராக இருந்து, தற்போது 2010களில் 14.8 லட்சம் ஹெக்டேராக 3 மடங்கு அதிகரித்து விட்டது.

கிணற்றுப் பாசனத்தைப் பற்றி சிறிது யோசித்தால் பல்வேறு உண்மைகள் விளங்கும். 1969-இல் பசுமைப் புரட்சியின் ஆரம்பத்தில் இந்தியாவில் 64 லட்சத்து 85 ஆயிரம் கிணறுகளும், தமிழகத்தில் 11 லட்சத்து 86 ஆயிரம் கிணறுகளும் இருந்தன. இதுவே 2012-இல் இந்தியாவில் 1 கோடியே 43 லட்சத்து 11 ஆயிரம் ஆகவும், தமிழகத்தில் 18 லட்சத்து 13 ஆயிரம் ஆகவும் அதிகரித்துள்ளது. இப் புள்ளிவிவரங்களில் இருந்து கிணற்றுப்

பாசனம் இந்தியாவில் 121 சதவிகிதமும் தமிழகத்தில் 53 சதவிகிதமும் அதிகரித்துள்ளதை அறிய முடிகிறது.

கிணறுகளுக்கு கிடைக்கும் நீரைப்பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும். ஏதோ ஆகாயத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் இக்கிணறுகளுக்கு இரவு நேரங்களில் தண்ணீர் வந்து சேர்ந்து விடுவதில்லை. பெய்கின்ற மழைநீர் மூலம் மட்டுமே (ஆறுகள் அல்லது ஏரிகள் மூலம்) இக்கிணறுகளுக்கு நீர் கிடைக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

மேலும் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். ஒருபுறம் கிணறுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மறுபுறம் அவைகளுக்கு நீர் வழங்கும் கால்வாய் மற்றும் ஏரிகளின் பரப்பு மற்றும் ஏரிகளின் எண்ணிக்கையும் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

இந்நிலையில் கிணற்றுப்பாசனம் அதன் நீர் அளிப்பின் உச்சக்கட்ட பங்களிப்பை அடைந்துவிட்டது. இனி இது மேலும் தொடர வாய்ப்புகள் மிகவும் குறைவு.

நீர் பயன்பாடு பற்றி சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவின்படி, நிலநீர் பயன்பாடு 1993-க்கு முந்தைய 25 ஆண்டுகளில் 15 சதவீதம் மட்டுமே அதிகரித்த போதிலும் நிலத்தடி நீரின் பயன்பாடு 34 சதவீதமாக அதிகரித்துள்ளது. இப்படி நிலத்தடி நீர் உபயோகம் அதிகரித்ததன் காரணம், ஏற்கெனவே பூமியில் பல்லாயிரம் ஆண்டுகளாக சேமிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர் பெரியளவில் உறிஞ்சப்பட்டுள்ளதே ஆகும். மீண்டும் அந்நிலத்தடி நீர்மட்டம் பழைய நிலைக்கு வரும் அளவு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாததால் வெகுவாக கீழ்நோக்கிச் சென்றுவிட்டது.

இச்சூழ்நிலையில், 1960-களில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியைப் போல், தற்போது நீர்ச் சிக்கன நடவடிக்கை மற்றும் நீர் உபயோகத் திறன் மேம்பாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அடிப்படையாகக் கருதப்படுவது நெல் சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனத்தை நாடு முழுவதும் புகுத்துவதே ஆகும். இதனைப் பின்பற்றினால் தற்போது நெல் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் நீரில் 50 முதல் 60 சதவீதம் வரை சேமிக்கப்படுவதோடு நெல் உற்பத்தித் திறனும்

தற்போதைய அளவைவிட இருமடங்குக்கும் கூடுதலாக கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதன் திறவுகோலாக விவசாயிகளிடையே இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். மேலும், கிணற்றுப் பாசனம் இதேநிலையில் தன் பங்களிப்பைத் தொடர்ந்து வழங்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அம்முயற்சிகளின் அடிப்படையே ஏரி, குளங்களைத் தூர்வாரி, மக்கள் தங்கள் சொந்த முயற்சியில் கழிவுநீர்க் குட்டைகளைப் பேரளவில் அமைத்து, பெய்கின்ற மழைநீரை அதிகபட்சமாக - வீடுகள் முதற்கொண்டு பாசன ஆதாரங்கள் வரை - சேமிக்க முயற்சிகள் மேற்கொள்வதும், ஆறுகள் மூலம் கிடைக்கும் நீரில் கால்வாய்ப் பாசனத்தை செம்மைப்படுத்துவதும் முக்கியமாகும்.

நிலநீர்ப் பாசன ஆதாரத்தில் குறைவு ஏற்பட்டால் அது நிலத்தடிநீர்ப் பாசனத்தை நேரடியாக பாதிப்படையச் செய்யும் என்பது கண்கூடான உண்மை என்பதனை அறிந்து அரசும், மக்களும் நீர் சேமிப்பில் முழு மூச்சுடன் செயல்பட்டால் நீர்ப் பற்றாக்குறை நீங்கும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முலாம் பழ விளைச்சல் பாதிப்பு**

வாலாஜபாத் : 'கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், வயல்களில் இப்போதும் ஈரப்பதம் தங்கி இருப்பதால், முலாம் பழ விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது' என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பல கிராமங்களில், 61 ஏக்கரில், முலாம் பழம் எனப்படும், வெள்ளேரி பழம் பயிரிட்டுள்ளனர்; அவை அறுவடை பருவத்தில் உள்ளன.இருப்பினும் வெள்ளப்பாதிப்பால், பொதுவாக, 1

ஏக்கருக்கு விளையக் கூடிய, 1 டன் விளைச்சல், இந்த ஆண்டு குறைந்துள்ளது என, விவசாயிகள் கூறுகின்றனர்.கடந்த ஆண்டின் விளைச்சலை விட, இந்த ஆண்டு, ஏக்கருக்கு, 400 கிலோ குறையும் அபாயம் இருப்பதாக, விவசாயிகள் கூறுகின்றனர்.

தை முதல் தேதியில், முலாம் பழம் விதை விதைப்போம். 75வது நாளில் அறுவடை துவக்குவோம். 1 ஏக்கருக்கு, 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், வயல் வெளியில் ஈரப்பதம் தங்கி இருப்பதால், செடிகளில் காய் பிடிக்காமல் உதிர்ந்து விடுகிறது. இதனால், நடப்பாண்டு முலாம் பழம் விளைச்சல் வெகுவாக குறையும் அபாயம் உள்ளது. - எஸ்.மனோகரன், முலாம்பழ விவசாயி, வரதாபுரம்

**வேர்க்கடலை அறுவடை துவக்கம்**

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வட்டாரத்தில், வேர்க்கடலை அறுவடை துவங்கியுள்ளது.

வாலாஜாபாத் வட்டாரத்தில், 425 ஏக்கரில், இறவை பயிர்களாக, மணிலா (வேர் கடலை) செடிகளை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். அவை, அறுவடைக்கு தயாராகியுள்ளதால், அறுவடை பணி துவங்கி உள்ளது. பொதுவாக, 1 ஏக்கர் பரப்பில் வேர்க்கடலை பயிரிட்டால், 30 மூட்டை வரை விளைச்சலை எதிர்பார்க்கலாம். கடந்த ஆண்டை காட்டிலும், நடப்பாண்டு, 1 ஏக்கருக்கு இரண்டு மூட்டைகள் அதிகரித்து, 32 மூட்டைகள் விளைச்சல் வந்துள்ளது; இது, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பருவ மழை கூடுதலாக பெய்ததால், செடிகளில் நன்கு காய் பிடித்து கூடுதல் மகசூல் கிடைத்துள்ளது. - பி.முனுசாமி, அரங்கநாதபுரம்

**மல்லிகைப்பூ கிலோ ரூ.60 தான்! காஞ்சிபுரத்தில் மலிவோ மலிவு!**

காஞ்சிபுரம் : மல்லிகைப்பூ, கனகாம்பரம், கேந்தி உள்ளிட்ட பல பூக்களின் விலை காஞ்சிபுரத்தில், நேற்று மலிவான விலையில் விற்கப்பட்டன.

கடந்த சில வாரங்களுக்கு முன், கிலோ, 2,000 ரூபாய்க்கு விற்ற மல்லிக்கைப்பூ, நேற்று, காஞ்சிபுரம் மொத்த சந்தையில் நேற்று, கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால், சாதாரணமாக, 100 பூ, 200 பூ என, எண்ணி வாங்கிய காஞ்சிபுரம் மக்கள், கிலோ கணக்கில் வாங்கி பயன்படுத்தினர்.போதாக்குறைக்கு, மாட்டு வண்டிகளிலும், தள்ளுவண்டிகளிலும், அம்பாரமாக குவிக்கப்பட்ட மல்லிக்கைப்பூ, தெருக்தெருவாக கொண்டு செல்லப்பட்டு, கிலோ, 60 முதல், 100 வரை விற்கப்பட்டது.நேற்று முன்தினம், கிறிஸ்தவர்களின் புனித நாளான புனித நாளை முன்னிட்டு, கிலோ, 200 முதல், 220 வரை விற்கப்பட்ட மல்லிகைப்பூ, நேற்று வாங்குவார் யாரும் இல்லாமல், மொத்த விலையில், மிகவும் குறைந்த விலைக்கு, அதாவது, கிலோ, 20க்கு விற்கப்பட்டது.

'சில்லறை விலையில், 80 முதல், 100 ரூபாய் வரை, கிலோவுக்கு விற்கப்பட்டது. இது, இதுவரை காணாத விலை வீழ்ச்சி' என, பூக்கடை பஜார் வியாபாரிகள் தெரிவித்தனர்.அதே நேரம், "மல்லிக்கைப்பூவில் உயர்ந்த ரகமாக கருதப்படும், உள்ளூர் மல்லி, கிலோ, 100 வரை விற்கப்பட்டது. விலை உயர்ந்திருப்பதற்கு ஏற்ப, அதன் மணமும், அழகும் நீண்ட நேரத்திற்கு இருக்கும்," என, பூ மொத்த வியாபாரிகளில் ஒருவரான தணிகா கூறினார்.

மல்லிக்கைப் பூ மட்டுமின்றி, மேடை அலங்காரங்களுக்கும், மலர் மாலைகளிலும் பயன்படுத்தப்படும், கேந்தி எனப்படும் மஞ்சள் மற்றும் சிகப்பு நிற பூவும், கிலோ, 20 ரூபாய்க்கு தான் விற்கப்பட்டது. வெளி மாவட்டங்களில் இருந்து வரும் இந்தப்பூ, சாதாரண நாட்களில், கிலோ, 200 வரை விற்கப்படும்; நேற்று, 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எனினும், 'வாங்குவார் யாரும் இல்லாததால், இன்னும் சில மணி நேரத்தில் குப்பை

தொட்டிக்குத் தான் போகும்' என, வியாபாரிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

விளைச்சல் அதிகம், அதிக அளவில் வரத்து, வாங்குவோர் குறைவு, வெயில் போன்ற பல காரணங்களால், பூக்களின் விலையில் அடைந்துள்ள வீழ்ச்சி, இன்னும் ஓரிரு நாட்களில் உயரும் என்ற நம்பிக்கையில், காஞ்சிபுரம் பூ மொத்த வியாபாரிகள் உள்ளனர்.

| | |
|---|---|
| மொத்த விலை<br>உள்ளூர் | கிலோவுக்கு |
| மல்லிகைப்பூ | 100 ரூபாய் |
| மல்லிக்கைப்பூ | 60 |
| கேந்தி | 10 |
| கனகாம்பரம் | 200 - 300 |
| சாமந்தி | 40 - 60 |
| ரோஜா | 60 - 80 |
| இட்லிப்பூ | 40 |
| தாமரை - 1க்கு | 10 |

**சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் தேயிலை வாரியம் அறிவுரை**

குன்னுார்:'தேயிலை செடிகள் மீது வேகமாக படர்ந்து வரும் சிவப்பு சிலந்தி தாக்குதலை கட்டுப்படுத்த, தேயிலை வாரியத்தை அணுகலாம்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

குன்னுார், ஊட்டி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள தேயிலை செடிகளில், சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால், 2000 ஆயிரம் ஏக்கர் வரையில்,தேயிலை தோட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் கூறுகையில்,"கோடை வெயிலின் வெப்பம் அதிகரிப்பால், தேயிலையில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதை தடுக்க, தேயிலை வாரியம் அறிவுறுத்தும் மருந்துகளை தெளிக்க வேண்டும்,"என்றார்.

**திண்டுக்கல்லில் சீனி மூடைக்கு ரூ.200 அதிகரிப்பு**

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து குறைவால் சீனி மூடைக்கு(50கிலோ) ரூ.200 விலை அதிகரித்துள்ளது.திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 10 முதல் 20 டன் சீனி விற்பனைக்கு வரும். கடந்த மாதம் சீனி வரத்து அதிகரிப்பால் விலை குறைந்து இருந்தது.

தற்போது சீனி வரத்து குறைவால், போக்குவரத்து செலவு அதிகரிப்பாலும், சீனி மூடை(50கிலோ) ரூ.200 விலை அதிகரித்து, ரூ.3600 க்கு விற்பனையாகிறது.

நேற்று முன்தினம் ஒரு கிலோ சீனி ரூ.33 க்கு விற்றது. விலை அதிகரிப்பால் நேற்று ஒரு கிலோ ரூ.36 க்கு விற்றது. போக்குவரத்து மற்றும் இதர செலவால் சீனி மூடைக்கு ரூ.200 அதிகரித்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்

**முந்திரி அறுவடை சீசன் துவங்கியது**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் தேவகோட்டை,கல்லல், சாக்கோட்டை, புதுவயல், காளையார்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் 7500 ஏக்கரில் முந்திரிக்காடுகள் உள்ளன. 10 ஆண்டுகளுக்கும் மேல் வளர்ந்துள்ள முந்திரி மரங்களில் தற்போது அதிகளவு பழங்கள் காய்த்துள்ளன.

மார்ச் முதல் ஜூன் வரை முந்திரி பழங்களில் இருந்து முந்திரிக்கொட்டை பறிக்கும் சீசன் துவங்கி விடும். தற்போது ஒவ்வொரு மரத்திலும் இருந்து தலா 6 கிலோ எடையுள்ள முந்திரி கொட்டை அறுவடை செய்யப்படுகிறது. பணப்பயிராக இங்கு விளையும் முந்திரி கொட்டை உள்ளூர் தேவைக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது. முந்திரி பழங்கள் எரிசாராயம் தயாரிப்பதற்கு கோவா, கர்நாடகா, கேரளா மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது.

சிவகங்கை தோட்டக்கலைத்துறை

உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரன் கூறியதாவது:முந்திரி மரங்கள் பெரும்பாலும் 40 முதல் 50 ஆண்டு பலன் தரக்கூடியவை.

இம்மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள முந்திரி மரங்கள் பழமையான ரகங்களாக இருப்பதால் மகசூல் அதிகம் கிடைப்பதில்லை. இம்மரங்களுக்கு இடையே வி.ஆர். ஐ 3, மற்றும் வி.ஆர்.ஐ 4 என்ற புதிய ஒட்டு ரக கன்றுகளை 7மீட்டர் இடைவெளி விட்டு, 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழத்திற்கு குழிகள் தோண்டி, ஒரு ஏக்கருக்கு 80 கன்றுகள் வீதம் நடவு செய்ய வேண்டும். இரு மடங்கு மகசூல் தரக்கூடிய இந்த புதிய ரக கன்றுகள் 30 ஆண்டு வரை நல்ல பலன் தரும். இந்த புதிய ரக கன்றுகளை அரசு தோட்டக்கலை பண்ணையில் வாங்கி, நட்டு வளர்த்தால், இவை ஓரளவிற்கு வளர்ந்ததும், பழைய மரங்களை வெட்டி அழித்து விட்டு முந்திரி தோட்டத்தை முற்றிலும் புதிதாக மாற்றி விடலாம்.

இவ்வாறு அவர் கூறினார்

## கோடை வெப்பம் எதிரொலி: தென்னங்கீற்று விலை உயர்வு

ப.வேலூர்: கோடை வெயிலால் வீடுகளில் அனலை போக்க ஓலைக் கீற்றுகளை அதிகளவில் மக்கள் வாங்கத் தொடங்கி உள்ளனர். இதனால், தென்னங்கீற்று விலை உயர்ந்துள்ளது.

கடந்த சில நாட்களாக, கடுமையான வெயிலால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வீடுகளில் அனலை குறைக்க, தென்னங்கீற்றுகளை வாங்கி மொட்டை மாடி, சிமென்ட் ஷீட்டுகள் ஆகியவற்றின் மேல் கொட்டகை அமைத்து, அதன் மீது தண்ணீர் தெளித்து அனலை குறைத்து வருகின்றனர். இதனால், ஓலைக் கீற்றின் வியாபாரம் சூடு பிடித்துள்ளது. கடந்த கோடைக் காலத்தில், 100 தென்னை ஓலைக் கீற்றுகள், 440 முதல், 450 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, 100 தென்னை ஓலைக் கீற்றுகள், 600 முதல், 650 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பொத்தனூர், கஞ்சிமடம், பாண்டமங்கலம், வெங்கரை, கபிலர்மலை, ஜேடர்பாளையம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிகளவில் தென்னை ஓலைகளை எடுத்து, கீற்று பின்னும் பணியில் பெண்கள் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொத்தனூரைச் சேர்ந்த தென்னை கீற்று வியாபாரி சதீஸ்குமார் கூறியதாவது: கோடை காலத்தில் தென்னங்கீற்று விற்பனை அதிகளவில் உள்ளது. இதன் விலை உயர்ந்துள்ளதால் தென்னை பயிரிடப்பட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வரும் ஜூன் மாதத்துக்கு பிறகு இதன் விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## கோடையில் கால்நடைகளின் தாகம் தீர்க்கும் பண்ணை குட்டை

காரைக்குடி: விவசாய நிலங்களிலும்,கண்மாய்,ஊரணிகளிலும் அமைக்கப்பட்ட பண்ணை குட்டைகளில் தற்போதைய வறட்சி நிலையிலும் தண்ணீர் தேங்கியுள்ளதால், கால்நடைகள் தாகம் தணிந்து வருகிறது.

பருவமழை பொய்த்த நேரம், வறட்சி காலத்தின் போது,நீராதாரத்தை பெருக்க மாவட்டம் தோறும் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டன. வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.50 ஆயிரம் முதல் ரூ.ஒரு லட்சம் வரை மானியமாக வழங்கப்பட்டது.

விவசாய நிலங்களில் 15 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம், 1.5 மீட்டர் ஆழத்துக்கு பண்ணை குட்டைகள் வெட்டப்பட்டன.தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம், கிராமங்களில் விவசாய நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள், கண்மாய்களிலும் பண்ணை குட்டைகள் வெட்டப்பட்டன.

மழை நீரை விவசாயிகள் சேமித்து வைத்தனர். மீன் வளர்த்தனர்.மீன்வளத்துறை மூலம் 50 சதவீத மானியத்தில் மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

தற்போது வெயில் சுட்டெரிக்க தொடங்கி கண்மாய்கள் வறண்டு காணப்படுகிறது. ஆனால், பண்ணை குட்டைகளில் நீர் தேங்கி,

கால்நடைகளின் தாகம் தீர்த்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பண்ணை குட்டை ஓரங்களில் வளர்ந்து வரும் சீமை கருவேல மரங்களால் இந்த நீர் மட்டம் குறைந்து வருகிறது. எனவே, இவற்றை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஸ்ரீபெரும்புதூரில் ரூ75 லட்சத்தில் கால்நடை மருத்துவமனை கட்டிட பணி தீவிரம்

ஸ்ரீபெரும்புதூர், : ஸ்ரீபெரும்புதூர் அடுத்த மேவளூர்குப்பம், வளர்புரம், தண்டலம், இருங்காட்டுகோட்டை, கீவளூர், மண்ணூர் உள்ளிட்ட 20க்கும் அதிகமான கிராமங்களில் சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இந்நிலையில் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டால், 15 கி.மீ. தொலைவில் இருக்கும் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வந்தனர். எனவே மேவளூர்குப்பம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்தனர்.இதையடுத்து அரக்கோணம்-தண்டலம் சாலை மேவளூர்குப்பம் பகுதியில் உள்ள அரசு இடத்தில் கால்நடை மருத்துவமனை கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு 75 லட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

**பவானிசாகர் அணை சீரமைப்பு பணி துவக்கம்**

சத்தியமங்கலம்,:பவானிசாகர் அணையானது ரூ.19.71 கோடி மதிப்பில் சீரமைக்கப்பட உள்ளது. இதற்கான பணி தொடங்கியது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தாலூகாவில் பவானிசாகர் அணை அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் இந்த அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 2.50 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தமிழகத்தில் மேட்டுர் அணைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய அணை பவானிசாகர் அணையாகும்.

தெற்காசியாவின் இரண்டாவது பெரிய மண்அணை என்ற பெருமையை பெற்ற இந்த அணை இந்தியா சுதந்திரம் பெற்ற பின் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 1948ம் ஆண்டு கட்டத்தொடங்கி 1954 ல் பணி நிறைவு பெற்றது. 9 கி.மீ நீளமுள்ள கரையை கொண்ட அணையின் கட்டுமான பணிக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.10.50 கோடி. பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அணையில் கடந்த திமுக ஆட்சிக்காலத்தில் ரு.7 கோடி செலவில் மேம்பாட்டுபணி நடைபெற்றது. அதன்பின் தற்போது ரு.19.71 கோடி செலவில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுபணி தொடங்கியுள்ளது. அணையின் கரைகளை பலப்படுத்துதல், அணைப்பகுதியில் உள்ள சாலைகளை மேம்பாடு செய்தல், மதகுகளை சீரமைத்தல், தடுப்புச்சுவர் பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பணியில் வடமாநில கூலிதொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர்கள் அணையின் மேற்பகுதியில் கேண்ட்ரி ஹவுஸ் அருகே கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர். அணையின் நீர்மட்டம் தற்போது 48.39 அடியாக உள்ளதால் அணையின் கரையை பலப்படுத்தும் பணி

மற்றும் மதகுகளை சீரமைக்கும் பணியை முதலில் மேற்கொள்ள உள்ளதாக ஒப்பந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

**கோவையில் மஞ்சள் விலை குவின்டால் ரூ.10 ஆயிரத்தை தாண்டியது**

கோவை, : கோவையில் நேற்று விற்பனையான மஞ்சள் விலை குவின்டால் ரூ.10 ஆயிரத்து 400ஐ தாண்டியதால் விவசாயிகள் நிம்மதியடைந்தனர்.கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 127 குவின்டாலும், கிழங்கு ரகம் 60 குவின்டாலும் என மொத்தம் 187 குவின்டால் விற்பனையானது. ரொட்டிக்கவுண்டனூர், தொண்டாமுத்தூர், சாமிசெட்டிபாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி, பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.8,666 முதல் ரூ.10,409 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,500. விற்பனை மதிப்பு ரூ.12 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.8,060 முதல் ரூ.9,999 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,200. விற்பனை மதிப்பு ரூ.5.52 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.17.52 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.6.18 லட்சம் குறைவாகும்.

கடந்த வாரத்தை காட்டிலும் விரலி மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.300 குறைந்துள்ளது. கிழங்கு மஞ்சள் ரூ.400 அதிகரித்துள்ளது. எனினும் விரலி மஞ்சள் அதிகபட்ச விலை குவின்டால் ரூ.10 ஆயிரத்து 400ஐ தாண்டியும், கிழங்கு மஞ்சள் ரூ.10 ஆயிரத்தை தொட்டதாலும் விவசாயிகள் நிம்மதியடைந்தனர்.

**ரூ.6 கோடியில் அமராவதி அணை சீரமைப்பு**

உடுமலை, : ரூ.6 கோடி செலவில் அமராவதி அணை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. 90 அடி நீர்மட்டம் கொண்ட இந்த அணை 1957 முதல் பயன்பாட்டில் உள்ளது. திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலமும், கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் நேரடி பாசனத்தில் 3,500 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையில் 9 ஷட்டர்கள் உள்ளன. அணை நிரம்பி வழியும்போது உபரி நீர் இந்த 9 ஷட்டர்கள் வழியாக திறந்து விடப்படும். இதுதவிர, ஆறு மற்றும் பிரதான கால்வாய்களில் தண்ணீர் திறக்கவும் தனி ஷட்டர்கள் உள்ளன. அவை அனைத்தும் பழுதாகி விட்டதால் அணையில் நீர்க்கசிவு இருந்து கொண்டே இருக்கிறது.

அதை தடுக்க அணையை சீரமைக்க வேண்டுமென நீண்டகாலமாக விவசாயிகள் கோரிக்கை விடுத்தபடி இருந்தனர். அவர்களின் கோரிக்கை, இந்த கோடை காலத்தில் நிறைவேறும் வகையில் தற்போது அணையில் சீரமைப்பு பணிகள் நடந்து வருகின்றன. ஷட்டர்கள் அனைத்தையும் பழுது நீக்கி வர்ணம் பூசப்படுகிறது. அணை சுவற்றின் உட்புறத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு உள்ளிட்ட சிறிய பழுதுகள் ரசாயன கலவையால் சரி செய்யப்படுகின்றன.

இதற்காக ராட்சத கிரேன்கள் கொண்டு வரப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. ஷட்டர்களை இயக்கும் மின்சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து மின்சார பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அணையின் மேல்புறச் சாலையிலும், பூங்காக்களிலும் மின்விளக்குகள் சரி வர எரிவதில்லை. இவை அனைத்தும் மாற்றியமைக்கப்படுகின்றன.மே இறுதி அல்லது ஜூன் முதல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கி அணைக்கு நீர்வரத்து இருக்கும். அதற்குள் அனைத்து பணிகளையும் முடிக்கும் நோக்கில் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

## கவாத்து செய்யப்பட்ட செடிகளில் ரோஜா மலர் பூக்க துவங்கின

ஊட்டி, : ரோஜா கண்காட்சிக்காக கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகளில் பூக்கள் பூக்க துவங்கின. ஏப்ரல் மாத இறுதிக்குள் அனைத்து செடிகளிலும் மலர்கள் பூத்து குலுங்கும் என தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.ஊட்டி விஜயநகரம் பகுதியில் ரோஜா பூங்காவில் ஆண்டுதோறும் ரோஜா கண்காட்சி நடத்துவது வழக்கம். இந்தாண்டு கண்காட்சி நடத்துவதற்காக ரோஜா செடிகள் கவாத்து செய்யும் பணி கடந்த ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து ரோஜா செடிகளுக்கு இயற்கை உரமிடப்பட்டு நாள்தோறும் நீர் பாய்ச்சும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டனர். இந்நிலையில் கவாத்து செய்யப்பட்ட மலர் செடிகள் தற்போது நன்கு செழித்து வளர்ந்துள்ளன. இதில் பெரும்பாலானவற்றில் ரோஜா மலர்கள் பூத்துள்ளன. எனினும் ஏப்ரல் மாத இறுதியில் அனைத்து செடிகளிலும் ரோஜா மலர் பூத்து குலுங்கும் என பூங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உவர்நிலத்தை சீர்திருத்துவது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம், : உவர்நிலத்தை சீர்திருத்தம் செய்வது குறித்து வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது, சாகுபடி நிலத்தில் தண்ணீரில் கரையும் உப்புக்கல் அளவுக்குமேல் அதிகமாக இருந்தால் அது உவர் நிலமாகும். போதிய மழையின்மையாலும், நிலத்தில் உள்ள உப்புக்கல் கரைந்து வெளியேற முடியாமல் போவதும், கோடைகாலத்தில் மழையின்மையால் ஏற்படும் வெடிப்புகளில் இருந்தும் மண்ணின் மெல்லிய துவாரங்களில் இருந்தும் உப்புக்கல் நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்படுவதாலும் பாசனம் செய்யப்படும் இடங்களில் உள்ள கடைமடை பகுதியில் வந்து சேரும்

உப்புகளாலும், உப்பு நிறைந்த நீரால் பாசனம் செய்வதாலும் மற்றும் வடிகால் வசதியற்ற பாசனத்தாலும் உவர் நிலம் உண்டாகிறது. இதனால் உவர்நிலங்களில் பயிர் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் குறைவாகவும், பயிருக்கு கிட்டாத நிலையிலும் இருக்கும்.

உப்புக்கள் அதிகமாக இருந்தால் பயிரின் வேர்கள் சத்துக்களையும், நீரையும் உறிஞ்சமுடியாத நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. இந்த நிலத்தை சீர்திருத்த, உப்பினை நீக்க நல்லநீரை தேக்கி வடிப்பதால் உவர்நிலத்தை சீர்படுத்த முடியும். நீரை தேக்குவதற்கு முன்பு நிலத்தை நன்கு சமன்படுத்த வேண்டும். அல்லது சரிவுக்கு ஏற்றவாறு சிறு, சிறு பாத்திகளாக பிரித்து வரப்புகள் அமைத்து நல்ல நீர் அல்லது மழை நீரிட்டு உழவு செய்து வடிகால் வசதியை முறையாக அமைக்க வேண்டும்.

நிலத்தை சுற்றிலும் 1-3 அடி ஆழமுள்ள வடிகால் வெட்டி உப்புநீரை அவ்வடிகால்கள் மூலம் வெளியேற்ற வேண்டும். அடிக்கடி குறைந்த அளவில் நீர் பாய்ச்சி வெளியேற்ற வேண்டும். சொட்டு நீர் பாசனம் சாலச் சிறந்தது. அதிக அளவு பசுந்தழை, தொழு உரம் மற்றும் கம்போஸ்ட் உரங்களை இட வேண்டும். உவரை தாங்கி வளரக்கூடிய கேழ்வரகு, பருத்தி, மிளகாய், தக்காளி, சூரியகாந்தி, உவர்புல் ஆகியவற்றை பயிரிட்டால் நல்ல பலன் கிடைக்கும். இவ்வாறு அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு உளுந்து, மணிலா வரத்து அதிகரிப்பு

புதுச்சேரி, : புதுவை தட்டாஞ்சாவடியில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. இங்கு புதுவை மற்றும் தமிழக பகுதிகளில் இருந்து விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் நெல், மணிலா, உளுந்து, எள், கேம்வரகு மற்றும் பயிர் பொருட்களை கொண்டு வருகின்றனர். விவசாயி களின் விளைபொருட்களை வியாபாரிகள் இங்கு நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். விற்பனை கூடத்திற்கு நேற்று வழக்கத்தை விட அதிக அளவில் மணிலா, உளுந்து மூட்டைகள் வரத்து இருந்தது.

இதனால் விவசாயிகள் கூட்டமும் அலைமோதியது. 40 கிலோ கொண்ட 850 மணிலா மூட்டைகளும், 100 கிலோ கொண்ட 500 உளுந்து மூட்டைகளும் வந்தது. மணிலா மூட்டைக்கு அதிகபட்சமாக ரூ.2,192க்கும், உளுந்து ரூ.9,805க்கும் ஏலம் போனது. கடந்த 10 நாட்களுக்கு முன், 100 கிலோ ரூ.10 ஆயிரத்துக்கு மேல் விலை போனது, நேற்று சற்று குறைந்துள்ளது. 80 கிலோ கொண்ட எள் மூட்டை ரூ.5,590க்கும், பச்சை பயிறு 100 கிலோ ரூ.6,117க்கும், காராமணி ரூ.9,167க்கும், கேழ்வரகு ரூ.2,115க்கும், தினை ரூ.1,947க்கும், பெரும் பயிறு ரூ.3,509, நாட்டு கம்பு ரூ.2,589, கொள்ளு ரூ.2,815க்கும் ஏலம் போனது.

## இயற்கை விவசாய முறை மாணவிகளுக்கு விளக்கம்

புதுச்சேரி, : புதுவை சுப்ரமணிய பாரதியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 7 நாள் என்எஸ்எஸ் சிறப்பு முகாம் நடந்து வருகிறது. இதில் பங்கேற்ற 65 மாணவிகள் ஆரோவில்லுக்கு கள பயணம் மேற்கொண்டனர். மேலும் வெற்றிக்கு வழிகாட்டி, பயனற்ற பொருட்களை பயனுள்ள பொருட்களாக மாற்றும் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலும் மாணவிகள் பங்கேற்றனர். இதன் ஒரு பகுதியாக, பூரணாங்குப்பத்தில் பட்டதாரி ஆசிரியர் பூங்குன்றன் தோட்டத்தில் இயற்கை விவசாயம் செய்வது குறித்த நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் திட்ட அலுவலர் கோவிந்தன் தலைமையில் மாணவிகள் கலந்து கொண்டனர். அப்போது, இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்தும், மண் வளத்தை பாதுகாக்க இயற்கை இடு பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்று விளக்கினர். மேலும், மாடுகளின் கழிவு பொருட்களை நேரடியாக தொட்டியில் சேகரித்து, அதனை சொட்டி நீர் பாசனத்தின் மூலம் நேரடியாக தாவரங்களுக்கு கிடைக்க பெற செய்வது, அலோச உற்பத்தி, பஞ்சகாவியம், இயற்கை பூச்சி விரட்டி, ொகாசு விரட்டி எவ்வாறு உருவாக்குவது குறித்தும் செயல்விளக்கம்

அளிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் கல்வி கழக நிறுவனர் ராமநாதன் மூலிகைகளின் பயன்கள் குறித்து விளக்கினார்.